## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** முல்லைத்தீவு மாவட்டத்தின் பதினொரு கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிகப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 ஆம் ஆண்டிற்கான முல்லைத்தீவு மாவட்டத்தின் 11 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 02 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கு முனைப்பழியற்ற அபிப்பிராயமும் 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வெளிப்படுத்தப்பட்டதுடன் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 ணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில், 6 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டிருந்த 291.16 மெட்ரிக் தொன் மானிய உர இருப்பின் பெறுமதி, ரூபா 51,558,611, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 2 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 237,400 பெறுமதியான கணனி நிதி செயலாற்றுகைக் கூற்றில் மீண்டுவரும் செலவாக காட்டப்பட்டிருந்தது. | 2024 நிதிக்கூற்றில் திரண்டநிதியில் சீர் செய்யப்படும் | கணனிகளின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாக வெளிப்படுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 2 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களிற்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 521,557 பெறுமதியான 03 மடிக்கணனிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | உடையார்கட்டு கமநலசேவை நிறைவேற்றுக் குழுவில் 2023 திசெம்பர் 31 இல் மகளீர் கமக்கார அமைப்பு சேமிப்பு கணக்கு மீதி ரூபா 776,928 நிதிக்கூற்றுக்களில் ரூபா 284,488 எனக் | இவ் ஆண்டு உதவி ஆணையாளின் அனுமதியுடன் கணக்கறிக்கையில் சீர் | வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு சீர் செய்ய நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டமையால் ரூபா 492,440 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செய்யப்படும் | எடுக்கப்படுதல் வேண்டும் |

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 02 உழவு இயந்திரங்கள், 7 கொடுப்பனவுகள், மற்றும் வாடகை வருமதி என்பவற்றின் கூட்டுத் தொகை ரூபா 6,188,638 இனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | இனி வரும் காலங்களில் இதனைப் பெற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை வேண்டும். |

### 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் நிதி ஒழுங்குவிதி 109(I) | 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களில் முன்னைய வருடங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வந்த ரூபா 2,622,002 உழவு இயந்திரங்களுக்கான வாடகை வருமதியினை தொடர்புடைய வருடத்திகான பதிவேடு ஆவணங்கள் மூலம் காரணங்கள் சரிவரப் பரிசீலிக்கப்பட்டிருக்காது கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. | குறித்த பணத்தை திரண்டநிதிக்கு தற்காலிகமாக மாற்றி சீர் செய்யப்பட்டுள்ளது. | வருமதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுதல் அல்லது முறையான பரிசீலனைக்குப் பின் அறவிடமுடியாத மீதிகளை உரிய அனுமதியின் கீழ் பதிவழிக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 9.1 | 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் காசு, காசோலை மற்றும் களஞ்சியங்கள் தொடர்புடைய உத்தியோத்தர்களிடமிருந்து பிணையங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 11 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 802,781 இற்கான பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 9,137,645 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளின் ரூபா8,334,864 தொகையால் பற்றாக்குறையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 2,793,211 பெறுமதியான வருமதிகள் மற்றும் ரூபா 10,275,795 பெறுமதியான சென்மதிகள் என்பன கடந்த 01 தொடக்கம் 11 ஆண்டுகளாக முறையே அறவிட்டுக் கொள்வதற்கு மற்றும் செலுத்தித்தீர்ப்பதற்கு ஆக்கஏர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருமதிகளை அறவிடுவதற்கும் சென்மதிகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சம்பத்நுவர கமநல சேவை நிறைவேற்றுக் குழுவில் 2016 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட நிழல் பிரதி இயந்திரமொன்று மீளாய்வாண்டில் இரு தடவைகள் ரூபா 135,900 க்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 03 மாத காலங்களுக்குள் பயன்படுத்த முடியாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தமையால் அத்திருத்தச் செலவுகள் பயனற்றுப் போயிருந்தன. | எலிகள் சேதப்படுத்தி திருத்திய பின்பும் மீண்டும் சேதப்படுத்தி திருத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களைப் பாதுகாக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அதன் செயல்திறனை கவனித்து திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 குறித்த நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படாத நிதியங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 09 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களின் கமக்கார அமைப்புக்களினது விவசாயிகளின் பிள்ளைகளில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பரிசுப்பொருட்கள் மற்றும் வெகுமதிகளை வழங்குவதற்காக பல்வேறு தரப்பினர்களிடம் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,198,164 கடந்த 02 தொடக்கம் 08 ஆண்டுகளாக குறித்த மாணவர்க ளுக்கு வழங்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | புலமைப்பரிசில் நிதியத்தை குறித்த நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துகளின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உடையார்கட்டு கமநல சேவை நிறைவேற்றுக் குழுவில் 2021 ஆம் ஆண்டு ரூபா 1,340,730 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நெற்களஞ்சியமானது ஒரு வருடத்திற்கு மேலாக உரிய நோக்கத்துக்கு பயன்படுத்தப்பட்டிருக்காது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. | நெல் சந்தைப்படுத்தல் சபையினால் நெல் கொள்வனவு செய்யப்படாமையே இதற்கான காரணமாகும் | பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அளம்பில் கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்விற்கு வழங்கப்பட்டிருந்த 106 உழவு இயந்திரங்கள் பழுதுபார்த்தல்கள் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காது கடந்த 04 தொடக்கம் 07 ஆண்டுகளாக வாகனத் தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தன. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (இ) | 2019 யூன் 19 ஆம் திகதி குத்தகைக்காரரிடமிருந்து மீளப்பெறப்பட்ட உழவு இயந்திரமொன்று நாளதுவரை குறித்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டிருக்காது வாகனத்தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தன. | வேறு விவசாயிக்கு மாற்றி வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிற்கும் ஒலுமடு கமக்கார அமைப்புக்குமிடையே ரூபா 4,814,412 தொகையில் குள புனரமைப்பு வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைவாக 2023 திசெம்பர் 11 ஆந் திகதி குறித்த வேலை பூரணமாக்க வேண்டியிருந்த போதிலும் நாளது வரை பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | மழை காரணமாக வேலைகள் பூரணமாக முடிவுறுத்த முடியாமல் போயுள்ளது. | குறித்த வேலையினை பூரணப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 08 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கமக்காரர் குழுவின் நிறைவேற்றுச் செயலாளர் பதவிகள் கடந்த 01 தொடக்கம் 08 ஆண்டுகளாக வெற்றிடமாக காணப்பட்டிருந்தாலும், அந்த பதவிகளுக்கு முறையான அனுமதியின்றி, நிலையத்தின் முகாமைத்துவ உதவியாளர் அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் கடமையாற்றி வந்த அலுவலர்களை கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் நியமித்திருந்தார். | உதவி ஆணையாளருடன் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினது 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 09 இன் பிரகாரம் தொடக்கம் 16 வரையான வருமானங்கள் சரிவர இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் சீர் செய்யப்படும் | சுற்றறிக்கைக்கு அமைய மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளும் பொருட்டு கமநல சேவைகள் நிலையங்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்த கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 06 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதற்கான குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு வருடாந்த முன்னேற்றங்கள் அளக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 5. கமநல வங்கி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 11 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களின் கமநல வங்கியால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த விவசாய கடன் தொகைகளில் ரூபா 2,955,632 கடந்த 01 தொடக்கம் 11 ஆண்டுகளாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | உடையார்கட்டு கமநலசேவை நிறைவேற்றுக் குழுவில் ரூபா 3,533,979 பெறுமதியான 5,731 கமநல வங்கிக் கணக்குகள் 02 வருடங்களுக்கு மேலாக செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளாக காணப்பட்டன. | இவ் வருடத்தில் அனைத்துக் கணக்குகளும் செயற்படுத்தப்படும். | செயற்பாடற்ற வங்கிக்கணக்ககளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
### 6.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 11 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாடுகளை நிதி ஒழுங்கு விதி 133 மற்றும் 134 இற்கமைவாக உள்ளகக் கணக்குப் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |